# இரண்டாம்படி எஸ்.எஸ்.எல்.சி. புத்தகம் / மதிப்பெண் சான்றிதழ் வழங்கக் கோரும் விண்ணப்பம்

**B3**

குறிப்பு: (அ) இவ்விண்ணப்பத்தினை விண்ணப்பதாரர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்விற்கு பயிற்றுவித்து முதன் முதலில் பொதுத் தேர்விற்கு அனுமதித்த பள்ளியின் தலைமை ஆசிரியர் / ஆசிரியை மூலம் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் மூலம் அனுப்பவேண்டும்.

(ஆ) எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வை வயது வரம்பு குறைந்தபட்ச கல்வி தகுதியான எட்டாவது வகுப்பு தேர்ச்சி அடிப்படையில் தனித்தேர்வர்களாக எழுதியவர்கள் மட்டும் நேரடியாக சென்னை அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பலாம். மற்றவர்கள் மேலே குறிப்பு (அ) தெரிவித்தபடியே விண்ணப்பிக்க வேண்டும்.

(மேலும் விரிவான விளக்கங்களுக்கு பக்கம் 3—ல் உள்ள அறிவுரைகளை படித்தறிதல் வேண்டும்.)

---

1. விண்ணப்பதாரர் பெயர் (தமிழிலும், ஆங்கிலத்திலும் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகம்/மதிப்பெண் சான்றிதழில் எவ்வாறு உச்சரிக்கப்பட்டு எழுதப்பட்டிருந்ததோ அவ்வாறே குறிப்பிடவும்).

2. விண்ணப்பதாரரின் பிறந்த தேதி .. ..

3. விண்ணப்பதாரரின் முழு முகவரி மற்றும் கைபேசி எண் .. ..

4. விண்ணப்பதாரரின் தகப்பனார் பெயர் .. ..

5. விண்ணப்பதாரரை முதன்முதலில் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்விற்கு பயிற்றுவித்து அனுமதித்த பள்ளியின் பெயர், விலாசத்துடன் குறிப்பிட வேண்டும்.

6. விண்ணப்பதாரரின் அசல் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தின் வரிசை எண் .. .. ..

---

7. விண்ணப்பதாரர் இரண்டாம்படி கோரும் அவர் இழந்த அசல் மதிப்பெண் சான்றிதழுக்கான விபரங்கள் மட்டும் கீழே உள்ள அட்டவணையில் கோரியவாறு குறிப்பிடவும்:—

| மாதம் / வருடம். | தேர்வெழுதிய பதிவெண். | தேர்வெழுதிய பள்ளி. | அசல் சான்றிதழ் வரிசை எண். |
|---|---|---|---|
| | | | |

8. விண்ணப்பதாரர் தனித் தேர்வாக (Private Candidate) எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வினை எழுதியிருப்பின் அதன் விபரம் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடவும் [தனித் தேர்வரின் மாற்றுச் சான்றிதழினை (T.C) இணைத்தனுப்ப வேண்டும்]:—

| மாதம் / வருடம். | தேர்வெழுதிய பதிவெண். | சான்றிதழ் வரிசை எண். |
|---|---|---|
| | | |

GCP-388-21-25,000 Cps.-4-8-2017 [HCL-13]

9. மேலே குறிப்பிட்டுள்ள தகவல்களுடைய விண்ணப்பதாரர் அசல் சான்றிதழ் எவ்வாறு இழக்கப்பட்டது என்பதை குறிப்பிடவேண்டும். (அச்சான்றிதழ் மீளத் திரும்பப்பெற வாய்ப்பின்றி இழக்கப்பட்டது என்று வருவாய்த் துறை அரசிதழ் பதிவுப் பெற்ற அலுவலர்களிடமிருந்து சான்றிதழ் பக்கம் 3–ல் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் பெற்று அனுப்பவேண்டும்.) மேலும் பூச்சிகளால் / தீ விபத்தால் அழிக்கப்பட்டு சான்றிதழ்களின் எஞ்சியதுண்டுகள் ஏதேனுமிருப்பின் அவற்றை இவ்வலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும், அதற்கு இச் சான்றிதழ் தேவையில்லை.

10. அச்சான்றிதழ் பூச்சிகளால் / வெள்ளத்தால் / தீ விபத்தால் அழிக்கப்பட்டு எஞ்சிய அசல் சான்றிதழின் துண்டுகள் இருப்பின் அவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா? (இணைக்கப்படாவிடில் இவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.)

11, விண்ணப்பதாரர் இரண்டாம்படி கோரும் சான்றிதழிற்காக கருவூலத்தில் செலுத்தப்பட்ட கட்டண விபரம் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடவும் (அசல் கருவூல செலுத்துச் சீட்டு இணைக்கவும்)

| கருவூலத்தின் பெயர். | செலுத்துச் சீட்டு எண் / தேதி. | செலுத்தப்பட்ட கட்டணம். |
|---|---|---|
| | | |

## உறுதிமொழி

விண்ணப்பத்தில் கலம் 8–ல் குறிப்பிட்டுள்ள விபரங்களுடைய எனது அசல் சான்றிதழை தற்காலிகமாக தடையோ அல்லது என்றும் தடையோ அல்லது ரத்து செய்தோ அதற்கான அதிகாரம் படைத்தவர்களால் செய்யப்படவில்லை என்றும் இதற்கு முன்பு நான் மேற்குறித்த சான்றிதழிற்கு இரண்டாம்படி கோரியதில்லை என்றும் தமிழ்நாடு அரசுத் தேர்வு இயக்குநரால் இரண்டாம்படி தரப்படவில்லை என்றும் சான்றளிக்கின்றேன்.

மேலே அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மை என உளமாற அறிவிக்கின்றேன். இவை தவறானவை என கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது தெரிவிக்கப்பட்டாலோ தமிழ்நாடு அரசுத் தேர்வு இயக்குநர் எடுக்கும் எவ்வித நடவடிக்கைக்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.

இடம் :

நாள் :

விண்ணப்பதாரரின் கையொப்பம்.

### பள்ளி தலைமை ஆசிரியரின்/ஆசிரியையின் சான்றிதழும் பரிந்துரையும்.

விண்ணபத்தில் குறிப்பிட்டுள்ள தகவல்கள் பள்ளி அலுவலக பதிவேட்டில் உள்ளதுடன் ஒப்பிட்டதில் அவை சரியானவை என்றும் விண்ணப்பதாரர்............................................................. இப்பள்ளியின் முன்னாள் மாணவர்/மாணவிதான் என்றும்/அன்னார் ............................................. வகுப்புவரை பயின்று தனித்தேர்வராக ............................................... எழுதியுள்ளார். விண்ணப்பத்தில் கலம் 8–ல் குறிப்பிடப்பட்டுள்ள அசல் சான்றிதழ் அன்னாருக்கு வழங்கப்பட்டதுதான் என்றும் இதற்கான இரண்டாம்படி கோரி விண்ணப்பிப்பவரும் இவரேதான் என்றும் சான்று பகர்கின்றேன்.

விண்ணப்பதாரருக்கு இரண்டாம்படி சான்றிதழ் வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

தலைமை ஆசிரியர்/ஆசிரியை கையொப்பம்
(பள்ளி முகவரி அடங்கிய முத்திரையுடன்.)

### அசல் சான்றிதழ் இழப்பிற்கான அத்தாட்சி சான்றிதழ். (மாதிரிப் படிவம்)

விண்ணப்பதாரர் ...............................க்கு வழங்கப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. தேர்வின் அசல் புத்தகம் எண் ............................/ மதிப்பெண் சான்றிதழ் பதிவெண் ............................ மாதம் ..................... வருடம் ..................... கொண்டது மீள திரும்பப்பெறும் வாய்ப்பின்றி இழக்கப்பட்டுவிட்டது என சான்றளிக்கப்படுகிறது.

கையொப்பம்.
(பதவி அலுவலக
பெயர் முத்திரையுடன்.)

இடம் :
நாள் :

---

### எஸ்.எஸ்.எல்.சி. இரண்டாம்படி விண்ணப்பிப்போருக்கு அறிவுரைகள்.

1. விண்ணப்பதாரர் இடைநிலைப் பள்ளி இறுதிச் சான்றிதழ் புத்தகம் மற்றும் மதிப்பெண் சான்றிதழ்களுக்கு இரண்டாம்படி வேண்டின் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டாம்படிக்கான விண்ணப்பத்தில் வேண்டிய தகவல்களை சரியாக பூர்த்தி செய்து வருவாய்த் துறை அலுவலரிடமிருந்து விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட அசல் சான்றிதழ் மீள திரும்பப் பெற வாய்ப்பின்றி இழக்கப்பட்டது என்று சான்றிதழ் பெற்று இரண்டாம்படிக் கட்டணம் செலுத்திய கருவூலச் செலுத்துச் சீட்டுடன் அன்னாரை எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்விற்கு பயிற்றுவித்து அனுமதித்த கடைசி பள்ளியின் தலைமையாசிரியர் மூலம் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்கு விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் விண்ணபத்தினை பரிந்துரை செய்து இவ்வலுவலகத்திற்கு அனுப்பவேண்டும். விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெற்றவுடன் அரசிதழில் விண்ணபதாரின் அசல் சான்றிதழ் இழப்பு குறித்த அறிவிக்கை வெளியிட்டு, பின்னர் இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் இவ்வலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலருக்கு அனுப்பி விண்ணப்பதாரருக்கு அவர் பயின்ற பள்ளித் தலைமை ஆசிரியர் மூலம் வழங்கப்படும்.

2. இரண்டாம்படி வழங்குவதற்காக விண்ணப்பதாரர் செலுத்தவேண்டிய நிர்ணயிக்கப்பட்ட கட்டண விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:–

| | |
|---|---|
| மாச் 1972 எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு வரை மதிப்பெண்கள் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்திலேயே பதியப்பட்டு வழங்கப்பட்டதால் இரண்டாம்படி எஸ்.எஸ்.எல்.சி. புத்தகம் வழங்க கட்டணம். | ரூ.500+5 சேவைக் கட்டணம். |
| அக்டோபர் 1972 எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு முதல் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தில் மதிப்பெண்கள் பதிவது நிறுத்தப்பட்டு மதிப்பெண் சான்றிதழ்கள் தனியே வழங்கப்பட்டு வருவதால் இத்தேர்வு முதல் | |
| (அ) எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தின் இரண்டாம்படி வழங்க கட்டணம் | ரூ.500+5 |
| (ஆ) மதிப்பெண் சான்றிதழ் இரண்டாம்படி ஒரு தேர்விற்கு வழங்க கட்டணம் | ரூ.500+5 |

மேலே தெரிவிக்கப்பட்டுள்ள கட்டண விபரப்படி இரண்டாம்படி விண்ணப்பிப்போர் இப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ள செலுத்துச் சீட்டிலேயே (பக்கம் 5) விபரங்களை நிறைவுசெய்து கருவூலத்தில் கட்டணம் செலுத்தி, அசல் செலுத்துச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்ப வேண்டும்.

ஏப்ரல் 1980 எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு முதல் மார்ச் 1983 எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு வரை தேர்வு எழுதியவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்திற்கு பதில் பள்ளி திரள் பதிவேடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களால் வழங்கப்பட்டதால் இதற்கு இரண்டாம்படி வேண்டின் இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவத்திலும் பள்ளிக் கல்வி இயக்கக அலுவலக கணக்கு தலைப்பில் கட்டணத்தை செலுத்தியும் விண்ணப்பிக்கவேண்டும். இதற்கான விண்ணப்பப் படிவம், அறிவுரைகள் மாவட்ட கல்வி அலுவலர் / அலுவலகத்தில் கிடைக்கும். இந்த வருடங்கட்குரிய இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் வேண்டின் அதை தெளிவாக குறிப்பிட்டு இவ்விண்ணப்ப படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும். மேற்படி கட்டணம், கருவூல செலுத்துச் சீட்டு மூலமே செலுத்த வேண்டும். இந்திய அஞ்சல் ஆணைகள் வங்கியின் காசோலை மூலம் கட்டணம் செலுத்தபடக் கூடாது.

3. மூன்றாம்படி சான்றிதழ் வேண்டின் இவ்விண்ணப்ப படிவத்திலேயே மூன்றாம்படி வழங்க வேண்டும் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டு ஏற்கெனவே வழங்கப்பட்ட அசல் மற்றும் இரண்டாம்படி சான்றிதழ்கள் இழந்துவிட்டதாக வருவாய்த் துறை அலுவலர் சான்றிதழுடன் மூன்றாம்படி கட்டணமாக ரூ.750+5/- (ரூபாய் எழுநூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) இப்படிவத்துடன் இணைத்துள்ள செலுத்துச் சீட்டிலேயே தகுந்த திருத்தம் செய்து விபரங்களை நிறைவு செய்து மேலே பத்தி 1–ல் தெரிவித்துள்ளவாறு விண்ணப்பிக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரர் இரண்டாம்படி மதிப்பெண் சான்றிதழ் வழங்க கோரும்போது அன்னார் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை எந்த பதிவெண் மூலம் எந்த வருடம், மாதம் எழுதினார் என்ற சரியான தகவலை படிவத்தின் கலம் (7) மற்றும் (8)–ல் முக்கியமாக தெரிவித்திட வேண்டும். சான்றிதழின் வரிசை எண் விபரம் தெரிவிக்க இயலவில்லையெனினும் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும். <u>தேர்வு எழுதிய பதிவு எண், வருடம், மாதம் ஆகிய விவரங்கள் குறிக்கப்படாத விண்ணப்பம் பரிசீலனை செய்ய இயலாது.</u>

5. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வை ஆசிரியர் தனித்தேர்வர் திட்டப்படி எழுதி சான்றிதழ் பெற்றவர்கள் இரண்டாம்படி வேண்டின் இவ்விண்ணப்ப படிவத்தை நிறைவு செய்து பக்கம் 3–ல் உள்ள அடையாள சான்றிதழை அவர் பயின்ற பள்ளி தலைமை ஆசிரியரிடம் பெற்று அசல் சான்றிதழ் இழப்பு குறித்து வருவாய்த் துறை அலுவலரிடம் சான்றிதழ் பெற்று அவர்கள் ஆசிரியராக பணிபுரியும் பள்ளியின் தலைமை ஆசிரியர் மூலம் இப்பள்ளி சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அலுவலர் மூலம் இவ்விண்ணப்பப் வடிவத்தை நிறைவு செய்து அவரது தொழிற் தகுதி அசல் சான்றிதழை பார்வையிட்டு திருப்பியனுப்பிட இணைத்தனுப்புதல் வேண்டும்.

6. எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வை, குறைந்தபட்ச கல்வி தகுதியான எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்று வயது வரம்பு அடிப்படையில், ஆண்/பெண் தனித்தேர்வராக தேர்வு எழுதி சான்றிதழ் பெற்றவர்கள் இரண்டாம்படி வேண்டின் இவ்விண்ணப்ப படிவத்தை நிறைவு செய்து அவர்கள் கடைசியாக பயின்ற பள்ளியின் தலைமை ஆசிரியரிடமிருந்து (பக்கம்–2–ல் உள்ள அடையாள சான்றிதழ்) மற்றும் வருவாய்த் துறை அலுவலரிடமிருந்து "அசல் சான்றிதழ் மீள திரும்பப்பெற வாய்ப்பின்றி இழக்கப்பட்டது" குறித்து சான்றிதழும் பெற்று அவரது பொதுக் கல்வித் தகுதி குறித்த அசல் பள்ளி மாற்று சான்றிதழ் அல்லது பதிவுதாள் (பார்வையிட்டு திருப்பியனுப்பிட) இணைத்து "அரசுத் தேர்வு இயக்குநரின் செயலாளர், சென்னை–600 006" அவர்கட்கு விண்ணப்பிக்க வேண்டும்.

/உத்தரவுப்படி/

அரசுத் தேர்வு இயக்குநர், அலுவலகம்,
சென்னை–600 006.

செயலாளர்,
மாநில பள்ளித் தேர்வுகள் குழுமம்

Challan No. **ORIGINAL** PROVINCIAL

D.P. Code No. 0202 01 102 AA 0205

0202 Education, Sports, Arts and Culture
01 General Education
102 Secondary Education
AA Tution and other fees
02 Director of Government Examinations - Fees for S.S.L.C. Duplicate / Certified copy of Marks/Date of Birth.

**CANDIDATE'S FEE RECEIPT.**

Received from ..........................................................................................................................
the sum of Rupees ....................................................................................................................
being the fees paid for S.S.L.C. Duplicate / Certified copy of
Marks/Date of Birth ..................................................................................................................

Name of Treasury / Sub-Treasury

Date of Remittance ............................

Treasury Officer.
Sub-Treasury

(To be signed and returned to the candidate remitter.

---

Challan No. **DUPLICATE** PROVINCIAL

D.P. Code No. 0202 01 102 AA 0205

0202 Education, Sports, Arts and Culture
01 General Education
102 Secondary Education
AA Tuition and other fees
02 Director of Government Examinations - Fees for S.S.L.C. Duplicate / Certified copy of Marks/Date of Birth.

**CANDIDATE'S FEE RECEIPT.**

Received from ..........................................................................................................................
the sum of Rupees ....................................................................................................................
being the fees paid for S.S.L.C. Duplicate / Certified copy of
Marks/Date of Birth ..................................................................................................................

Name of Treasury / Sub-Treasury

Date of Remittance ............................

Treasury Officer.
Sub-Treasury

(To be signed and returned to the candidate remitter.)

---

Challan No. **TRIPLICATE** PROVINCIAL

D.P. Code No. 0202 01 102 AA 0205

0202 Education, Sports, Arts and Culture
01 General Education
102 Secondary Education
AA Tution and other fees
02 Director of Government Examinations - Fees for S.S.L.C. Duplicate / Certified copy of Marks/Date of Birth.

**CANDIDATE'S FEE RECEIPT.**

Received from ..........................................................................................................................
the sum of Rupees ....................................................................................................................
being the fees paid for S.S.L.C. Duplicate / Certified copy of
Marks/Date of Birth ..................................................................................................................

Name of Treasury / Sub-Treasury

Date of Remittance ............................

Treasury Officer.
Sub Treasury

(To be signed and returned to the candidate remitter.)